<u>முதல் கூடுதல் சார்பு நீதிமன்றம், ஈரோடு, ஈரோடு மாவட்டம்.</u>

அசல் வழக்கு எண்.536/2022 இ.ம.எண்.

எம்.சி.ஓ.பி.எண். நி.வே.ம.எண்.

2026ம் ஆண்டு மார்ச் மாதம் 10–ம் தேதி பிரதிவாதி தரப்பு சாட்சி பி.வா.சா.3–ன் வாக்குமூலம் 1989ம்ஆண்டு 19வது விதி ஏற்பாட்டின்படி திரு.G.அசோக்பிரசாத் B.A.B.L., M.S.E.N., ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

(வாதிகள் ஆஜர் இல்லை. 1ம்பிரதிவாதி ஆஜர். வாதி மற்றும் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர்கள் ஆஜர்)

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : கதிர்வேல் | மாவட்டம் | : நாமக்கல் |
| த/பெ.பெயர் | : தாமோதரன் | தொழில் | : |
| கிராமம் | : | வயது | : 61 |
| வட்டம் | : | | |

<u>முதல் விசாரணை</u>:

நான் இந்த வழக்கின் பிரதிவாதி தரப்பில் 3ம் சாட்சி ஆவேன். நான் இந்த வழக்கில் என்னுடைய நிரூபண பிரமாண வாக்குமூலத்தை தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள விபரங்கள் தெரியும், அதிலுள்ள கையெழுத்து என்னுடையதாகும். எனது நிரூபண வாக்குமூலத்தை முதல் விசாரணையாக ஏற்றுக் கொள்ளுமாறு பிரார்திக்கிறேன்.

1. மேற்படி எனது தரப்பு ஆவணமாக 27.02.2018ம் தேதி கே.வேலுசாமியின் மகள் வி.ரமாதேவி அவர்களின் திருமணவரவேற்பு விழாவின் வீடியோவின் குறுந்தகடு பி.வா.சா. 26 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி குறுந்தகடுக்கு Certificate under Section 63(4) of the Bharathiya Sakshya Adhiniyam, 2023 தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

வாதி தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.